2020 மார்ச் 17] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறோம். அதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் இந்த அவையில் தெரிவித்தனர். அதற்குண்டான முழு விளக்கத்தையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார். அரசு எந்தெந்த வகையில் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்ற விவரங்கள் முழுவதையும் தெரிவித்துள்ளார். ஆகவே, இதில் அச்சப்பட வேண்டிய தேவையே இல்லை. ஆகவே, சட்டமன்றத்தை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து உறுப்பினர்களுக்கும் முழு பாதுகாப்பு வழங்கப்படும். வேண்டுமெனில் உங்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கும் அரசு தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல நாம் சட்டமன்றத்திற்குள்ளே வருகின்றபொழுதுகூட பரிசோதனை செய்துதான் நம்மையும் அனுப்புகிறார்கள் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

(ஆ) தமிழகத்தில் வெடிகுண்டு கலாச்சாரம் பரவுவதைத் தடுத்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

முற்பகல் 11–50

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெடிகுண்டு சமாச்சாரத்தைச் சொல்லுகிறபோது, இப்படி ஒரு கலாச்சாரம் உருவாகியிருக்கிறது, இதை முளையிலேயே தடுக்க வேண்டுமென்று சொன்னேனே தவிர, இந்த ஆட்சியில் சட்டம்–ஒழுங்கு சரியில்லை என்றோ அல்லது நீங்கள் கவனிக்கவில்லை என்றோ சொல்லவில்லை. நடைபெறுகிற சம்பவங்களை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அதைக் கட்சி சார்பற்ற முறையிலே சொன்னேன். ஆனால், உடனே மாண்புமிகு முதல்வர் அவர்கள், இது எல்லா ஆட்சியிலும் நடக்கும், உங்கள் ஆட்சியில் நடக்கவில்லையா என்று கேட்கிறார். நான் ஒன்று சொல்கிறேன். இது எல்லா ஆட்சியிலும் நடக்கும். ** ஆகையினால், எந்த ஆட்சியில் நடக்கவில்லை? ஆனால், இந்தப் பதில் சரியில்லை என்பதுதான் என் கருத்து. காரணம், எங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆட்சியில் இதெல்லாம் சரியில்லை என்றுதானே மக்கள் உங்களுக்கு ஓட்டு போட்டார்கள். நீங்களும் அதையே சொன்னால் எப்படி? "அவன் கிடக்கிறான் குடிகாரன், நீ போடு பூ போட்ட கிளாசில் ஒன்று" என்று சொல்வதைப்போல் இருக்கிறதே தவிர, நீங்கள் எப்படி இப்படிச் சொல்லலாம்? ஆகையினால், எங்கள் ஆட்சியில் நடக்கவில்லை என்று சொல்ல வேண்டும். உங்கள் ஆட்சியில் நடந்திருக்கிறது, எங்கள் ஆட்சியில் நடக்கவில்லை என்று சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு, உங்கள் ஆட்சியில் நடக்கவில்லையா என்று கேட்டால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சொந்தப் பகையின் காரணமாக நடைபெற்ற சம்பவம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றும் கிடையாது. ஆகவே, பேசுகின்ற முறை, தோற்றம் ஆகியவற்றை வைத்துத்தான் நான் அந்த பதிலைச் சொன்னேன். ஆகவே, இது எல்லா ஆட்சியிலும் நடைபெறும். அது நடைபெறக் கூடாது என்பதுதான் எங்கள் எண்ணம். அது எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி. சட்டம்–ஒழுங்கைப் பேணிக் காப்பதிலே தமிழகம் முதலிடம் வகித்துக்கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழகம்தான் சட்டம்–ஒழுங்கைப் பேணிக் காப்பதில் முதலிடம். இதற்காக நாங்கள் விருதுகளைப் பெற்றிருக்கின்றோம். India Today நிறுவனத்தால் தொடர்ந்து இரண்டு ஆண்டுக்காலமாக, சட்டம்–ஒழுங்கைப் பேணிக் காப்பதில் முதல் மாநிலம், பராமரிப்பதில் முதல் மாநிலம் என்று விருதுகளைப் பெற்றிருக்கின்றோம். அதில் எந்த ஐயப்பாடும் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இது சொந்தப் பிரச்சினைக்காக ஏற்பட்ட நிகழ்வு. இதை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? யார் யாருக்கு என்ன தகராறு இருக்கின்றது என்பதை யாராலும் யூகிக்க முடியாது. ஆகவே, அப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றிருக்கின்றது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு இரும்புக் கரம் கொண்டு எங்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 17]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய உரையில், ** என்ற ஒரு கருத்தைச் சொன்னார். அது ஒரு மதத்தைச் சார்ந்திருக்கிறது. ஒரு மதத்தைப் புண்படுத்துகிற வகையிலே உள்ள அந்தக் கருத்தை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்து தேவையில்லை. அந்தக் கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

(இ) கவன ஈர்ப்புத் தீர்மானங்களை அவையில் எடுத்துக்கொள்வது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

** **திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Opposition Party உறுப்பினர்களால் call attention கொடுப்பதெல்லாம் சகஜம். நிறைய உறுப்பினர்கள் call attention கொடுத்திருக்கிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு call attention கூட எடுக்க மாட்டேன் என்கிறீர்கள். ஆனால், சில நேரங்களிலே zero hour–லே எங்களை allow செய்கிறீர்கள். அதற்கு மிக்க நன்றி. நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அவற்றை அப்படியே விட்டுவிடுகிறீர்கள். ஆனால், குறிப்பிட்ட அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அமைச்சர்கள் அதற்குப் பதில் சொன்னால்தான், அது பிரயோஜனமாக இருக்கும். இது தங்களுக்குத் தெரியாததல்ல. நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் call attention கொடுத்திருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள், House நடக்குமென்று சொல்லிவிட்டார். ஆகையினால், இதையாவது கொஞ்சம் எடுத்துக்கொள்வதற்கு, நாளைக்கு சபை நின்றுவிடுமோ, இன்றைக்கு சபை நின்றுவிடுமோ என்று நாங்கள் நினைத்தோம். இல்லை, நிற்காது. எனவே, நீங்கள் அருள்கூர்ந்து உறுப்பினர்கள் கொடுத்த call attentions–ஐ எல்லாம் எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் zero hour–ல் எங்களை allow செய்கிறீர்கள். அதற்கு thanks. தவறாக நினைக்காதீர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.